**மோட்டார் விபத்து கோருரிமை தீர்ப்பாயம், (சார்பு நீதிமன்றம்) செஞ்சி**

**எம். சி.ஓ.பி.எண்.930/2017 மற்றும் 927/17,928/17,932/17,933/17 நாள். 13.06.2024**

2024 ம் ஆண்டு ஜுன் திங்கள் 13 ம் நாள் மனுதாரர் தரப்பு 5 ம் சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அபிதா | தொழில் | |
| த. பெ./க.பெ. | வடிவேல் | சாதி | |
| கிராமம் | ஆர்.நயம்பாடி | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 20 |

**ம..சா.5**

## குறுக்கு விசாரணை

நான் தற்போது B.Sc., Nursing படித்து வருகிறேன். உங்கள் கல்லூரியல் sports நடப்பதுண்டா அதில் நீங்கள் கலந்து கொண்டதுண்டா என்றால் எனக்கு Sports பிடிக்காது. விபத்து நடந்த தேதி 17.12.2017 காலை 11 மணி அளவில் விபத்து நடைபெற்றது. சவுட்டுர் கிராமம் துரை ராஜ் நிலம் அருகில் ரோட்டின் திரும்பும் இடத்தில் நின்று கொண்டிருந்தேன். என்னுடன் என்தோழியும், மற்றும் ஒரு ஆன்டியும் கோவிலுக்கு செல்வதற்காக நின்று கொண்டிருந்தோம். என் மீது மோதிய வாகனம் ஆட்டோ ஆகும். அதன் பதிவு எண் எனக்கு தெரியாது. ஆட்டோ வருவதை கவனிக்காமல் நானும், என் தோழியும் திடீரென்று ரோட்டை கடக்க முயன்றுள்ளீர்கள் என்றால் சரியல்ல. ஆட்டோவில் யார் யார் வந்தார்கள் என்றால் எனக்கு நினைவு இல்லை. விபத்தில் எனக்கு வலது தோள்பட்டை, மற்றும் கை, ஆகியவற்றில் காயம் ஏற்பட்டது . எலும்பு முறிவு எதுவும் கிடையாது. அனைத்தும் சிராய்பு காயம் என்றால் சரிதான். செஞ்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக்கொண்டு, பின்பு கலைமணி தனியார் மருத்துவமனயையில் சிகிச்சை பெற்றேன். தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான ஆவணங்கள்கொடுத்துள்ளீர்களா என்றால் இல்லை. செஞ்சி அரசு மருத்துவமனையில் அளிக்கப்பட்ட விபத்து பதிவேடில் உங்களுக்கு ஏற்பட்ட காயம் சொர்ப்ப காயம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். உங்களால் நடக்க முடியவில்லை என மனுவில் நஷ்டயிடு பெறுவதற்காக சொல்லியுள்ளீர்கள் என்றால் சரியல்ல. விபத்தில் ஏற்பட்ட காயத்திற்காக கலைமணி தனியார் மருத்துவமனையில் 2 நாட்கள் சிகிச்சை பெற்ற பின்பு வேறு எந்த மருத்துவமனையில்

சென்று சிகிச்சை பெறவில்லை. உங்கள் மனுவில் மீண்டும் சிகிச்சை பெற்றுக்கொண்டதாகவும் அதற்கு ரூ.50 ஆயிரம் செலவானது என கூறியுள்ளது என்று சொன்னால் சரியல்ல. விபத்து உங்கள் கவனகுறைவால் தான் நடந்தது என்று சொன்னாலும் வாகன ஓட்டுநரின் கவனகுறைவால் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் கேட்டுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சரியல்ல. 2 ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.